The Journal of The Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library

EDITED BY

M. SADASIVAM, M. A., M. Litt.,
DIRECTOR
Sarasvati Mahal Library
Thanjavur.

Vol. XL

Nos. 1 & 2.

PUBLISHED ON BEHALF OF

THE SARASVATI MAHAL LIBRARY

THANJAVUR

ANNUAL SUBSCRIPTION Rs. 50/-

A. D. 1991.

VISITOR'S VIEWS ...

When I came to Tanjore to participate in the Centenary celebration valedictory function of the incomparable Tamil Poet Bharathidasan organised by the Tamil University, I took another opportunity to visit the monument of Indian culture and heritage.

Every time I come here I am constantly reminded of the line of Naladiar, a Tamil didactic classic "கல்வி கரையில கற்பவர் நாள் சில" meaning art is long and life is short. Poet Bharathidasan would say "உலக நாகரிகத்தை விளக்கும் செப்பேடு தமிழ்" meaning human civilisation is explained and recorded by the Tamil language as it happens to be the most ancient spoken language. The cradle of human civilisation is this part of the country, several anthropologists and archaeologists affirm. I get a fresh breath of invigorated life whenever I come here.

I am deeply touched by the dedicated service rendered by the Director Mr. Sadasivam and every member of his staff. Their good work is reflected in every inch of this Mahal. May the Almighty be with them to continue their invaluable service for time out of mind.

Sd. S. SRIPAL,
Inspector General of Police,
Tamil Nadu.

22—4—1991.

THE JOURNAL OF
The Tanjore Maharaja Serfoji Sarasvati Mahal Library

EDITED BY

M. SADASIVAM, M. A., M. Litt.,
DIRECTOR,
Sarasvati Mahal Library,
Thanjavur.

PUBLISHED ON BEHALF OF

THE SARASVATI MAHAL LIBRARY,

THANJAVUR.

1991] [Price : Rs. 30—00

CONTENTS

		PAGES
1.	EDITORIAL	
2.	தஞ்சை மராட்டியப் புலவர்களின் மான்மிய நூல்கள் तंजावर मराठी कवींचे महात्म्य ग्रंथे Thanjavur Marathi Kavinche Mahatmiya Granthem **—T. R. Bheema Rao, Marathi Pandit, Sarasvati Mahal Library.**	1—20
3.	வலம்புரிச் சங்கு — Valampuri Sangu **—Pandit Thediyur S. Krishnamurthi Sastrigal, Sanskrit Pandit, Sarasvati Mahal Library.**	21—28
4.	மகாமகம் — Mahamaham **—M. Seeralan, B. A., M. L. I. S., Librarian, Sarasvati Mahal Library.**	29—38
5.	Public Library Movement in Tamil Nadu **—Dr. C. Palanivelu, Director of Public Libraries, Tamil Nadu.**	39—52
6.	Second World Marathi Conference Moka, Mauritius **—Speech of Shri Sharad Pawar, Chief Minister, Maharashtra, India.**	53—64
7.	இலாவணி இலக்கணம் — Ilavani Ilakkanam **—Y. Manikandan, M. A., M. Phil., Proof Reader (Temporary), Sarasvati Mahal Library.**	65—70
8.	பிரபஞ்சாமிருதசார ராஜரஞ்ஜன புராணம்-போசல வம்சாவளி **Prapanchamiruthasara Rajaranjana Puranam - Bhosalavamsavali** **—S. Rajalakshmi, Sanskrit Pandit, Sarasvati Mahal Library.**	71—87

The Journal of

The Thanjavur Maharaja Serfoji's Sarasvati Mahal Library

Vol. XL A. D. 1991—Saka 1913 Nos. 1 & 2.

EDITORIAL

I crave the indulgence of the readers for not bringing out the numbers 1 and 2 of this volume as separate issues. In the turbulent situations that prevailed in this Library during the past several months it was not possible to print this issue in time. The issues 3 and 4 of this volume will be brought out before the end of this year.

The first article gives an account of the works on Puranic themes composed by the Marathi poets during the reign of Maharashtrian kings at Thanjavur. This article is written both in Tamil and Marathi by the Marathi Pandit of this Library.

The second article is written by the Senior Sanskrit Pandit of this Library Thiru S. Krishnamurthi Sastrigal on the aspects of the clock-wise turned conch-shell. Several illustrations are given from Sanskrit works.

Dr. C. Palanivelu, the Director of Public Libraries has written a very good article on the Public Library movement in Tamilnadu.

The speech of Shri Sharad Pawar, Chief Minister of Maharashtra delivered on the occasion of the Second World Marathi Conference held in Mauritius is reproduced here.

Thanjavur,
4—6—91.

M. SADASIVAM,
DIRECTOR.

ஆசிரியவுரை.

சரசுவதி மகால் நூலகத்தின் ஆய்விதழ்த் தொகுதி 40 பகுதி 1 & 2 ஐத் தற்பொழுது வாசகர்கள் முன்வைப்பதில் பெருமையடைகிறோம். இக்கலைக் கருவூலத்திலிருந்து அவ்வப்போது அரும்பெரும் செய்திகளை அள்ளித்தரும் அரும்பணி இவ்விதழ் வாயிலாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. நம் முன்னோர்கள் பல்வேறு மொழிகளில் எழுதிவைத்துள்ள ஓலைச் சுவடிகள் மற்றும் காகிதச் சுவடிகளில் உள்ளவை தொடர்ச்சியாக வெளியிடப்பட்டுப் பல சிறுநூல்களாக வெளிவந்துள்ளன. அதே பாங்கில் இவ்விதழில் சிறு சுவடிகளை வெளிப்படுத்தும் பகுதியும் சுவடிகளின் அடிப்படையிலான கட்டுரைகளும் இடம் பெறுகின்றன.

'தஞ்சை மராட்டியப் புலவர் மான்மிய நூல்கள்' என்னும் மராட்டிய மொழியிலான கட்டுரையும் அதன் தமிழ்ப்படுத்தப் பெற்ற பகுதியும், 'வலம்புரிச்சங்கு' என்னும் கட்டுரையும், 'மகாமகம்' என்னும் கட்டுரைப்பகுதி, மற்றும் மகாமக அந்தாதிக் கும்மியும். தமிழகத்தில் பொது நூலக இயக்கம் குறித்த ஆங்கிலக் கட்டுரையும், மொரீஷியஸில் நடைபெற்ற இரண்டாவது உலக மராத்திய மொழி மாநாட்டில் நிகழ்த்தப்பெற்ற மராட்டிய மாநில முதல்வரின் பேச்சுரையும், 'இலாவணி இலக்கணம்' என்னும் சிறு சுவடிநூற் பதிப்புப் பகுதியும், 'பிரபஞ்சாமிருதசார ராஜரஞ்சன புராணம் என்னும் தலைப்பிலான வடமொழிச்சுவடியின் 'போசல வம்சாவளி' என்னும் சிறு பகுதியும் அதன் தமிழ்ப்படுத்தப்பெற்ற பகுதியும் இவ்விதழில் வெளியிடப்பெறுகின்றன.

ஆய்வாளர்களும், அறிஞர்களும் வழக்கம்போல் படித்துப் பயன்பெறுவார்களென நம்புகிறோம்.

தஞ்சாவூர்,
4-6-91.

மு. சதாசிவம்,
இயக்குநர்.

தஞ்சை மராட்டிய புலவர்களின்

மான்மிய நூல்கள்

டி. ஆர். பீமராவ்,
மராட்டிப் பண்டிதர்,
சரசுவதி மகால், தஞ்சாவூர்.

தஞ்சை மண்டலம் கி. பி. 1676 ஆம் ஆண்டு மராட்டிய போசலகுல மன்னர் சத்ரபதி சிவாஜியின் இளைய சகோதரர் ஏகோஜி என்கிற வெங்கோஜியின் ஆளுகையின்கீழ் வந்தது.

தஞ்சையை அரசுபுரிந்த மராட்டிய மன்னர்களும், அவையில் அமர்ந்த மராட்டிய புலவர்களும், மராத்தி மொழியில் பல அறிய நூல்களை எழுதி தங்கள் தாய் மொழிக்கு சேவை செய்திருக்கின்றனர். அவ்வழியில் இங்கு மராத்திய புலவர்கள் எழுதிய மான்மிய நூல்களைப்பற்றிய விவரத்தொகுப்பினை கீழே காண்போம்.

மராத்தி மான்மியத்தொகுப்பினை இரு வகையாகப் பிரிக்கலாம் ஒன்று தமிழ்நாட்டிலும் மற்றும் பாரதநாட்டிலும் காணும் திருக்கோவில்கள் புராணவரலாறு ஆகும். இரண்டாவது தமிழ்நாட்டில் வாழ்ந்த சிவனடியார்கள் வரலாறு ஆகும்.

I தமிழகத்தில் உள்ள திருக்கோவில்களின் வரலாறு.

1) ராமபண்டிதர்: கி. பி. 1725–1764

தஞ்சையை அரசுபுரிந்த ஷஹாஜியின் காலத்தில் வாழ்ந்த மாதவ ஸ்வாமியின் மூத்த மைந்தர் ராமபண்டிதர். இவர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார். இவர் தர்க்கம், மீமாம்ஸம் முதலிய சாஸ்திரங்களில் வல்லவர். காவியம், நாடகம், அலங்காரம், சங்கீதம் போன்ற சாஸ்திரங்களைக் கற்று அதில் முதன்மையாக திகழ்ந்தவர். இவர் வேதாந்தம், புராணம், ராமாயணம், பாரதம், பாகவதம் இவைகளில் நூல்களை எழுதினார். அவை ஆத்மவித்யா விலாஸம், கலிவிடம்பனம், தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம், கமலாலய மகான்மியம், தியாகராஜ மகான்மியம், ஹரிபக்திசுதோதயம், மானசோல்லாசம், ஆஸ்ரமதர்மம், ஹரிவம்சம், ஹரிசசந்திரன் கதை, பாகவத முதல் மற்றும் தசமஸ்கந்தம் பாணாசுரன்யுத்தம், சுருதிகீதை முசுகுந்தன் கதை, விநாயக மகாத்மியம் முதலியன.

ராமபண்டிதர் தமிழகத்தில் கோயில்கொண்டுள்ள திருவாரூர் தியாகேச பெருமானின் லீலைகளை வர்ணித்து **'தியாகேச மகான்மியம்'** என்றும் **'கமலாலய தீர்த்தத்தின்'** பெருமையை புகழ்ந்து **'கமலாலய மகான்மியம்'** என்றும், முறையே வடமொழிஸ் காந்தபுராணம், பத்மபுராணம் இவற்றின் ஆதாரத்துடன் எழுதியிருக்கிறார். தியாகராஜ மகான்மியம் நூலை மூன்று தலைப்பில் எழுதியிருக்கிறார். அவை தியாகராஜ மகான்மியம், தியாகராஜ தியானம், தியாகராஜ ஆகமத்தியானம் என்று. திருவரூரில் கோவில்கொண்டுள்ள வீதிவிடங்கன் தியாகராஜ மூர்த்தியை வர்ணித்து எழுதியிருக்கிறார். அதில் இந்திரனிடமிருந்து முசுகுந்தமன்னன் தியாகராஜ மூர்த்தியைப்பெற்று, தான் ஆட்சிசெய்யும் சோழநாட்டில் திருவாரூரில் தகுந்த இடத்தில் கோவில்கட்டி, இம்மூர்த்தியினைவைத்து பக்தியுடன் வழிபட்ட வரலாற்றினையும். திருவாரூரில் தியாகராஜ ஸ்வாமியின் கோவிலுக்கு பின்புறம் அமைந்துள்ள 'கமலாலய தீர்த்தத்தின் வரலாற்றினையும் அழகுபட எழுதியிருக்கிறார். ராமபண்டிதரின் நூல்களில் இவ்விரு நூல்களும் ஒரு சிறந்த தொகுப்பு ஆகும்.

2) கங்காதர கவி : *கி. பி.* 1735—1772.

ஷஹாஜியின் அவையில் அலங்கரித்த புகழ்பெற்ற ருக்மாங்கத கவியின் மைந்தர் கங்காதரர், கங்காதரரின் நூல்கள் ஹரிபக்தி சுதோதயம், நரசிம்ஹ புராணம், காசிமகான்மியம், கோசாவித்திரிகதை, சூதசம்ஹிதை, மல்லாரிமகாத்மியம், ஹரிவம்ச பாரதம், பாகவத தசமஸ்கந்தம், காமதந்திரசாரம். மற்றும் ஸ்ரீரங்கநாத மகிமை முதலியன. இதில் தமிழ்நாட்டில் கோவில்கொண்டுள் ஸ்ரீரங்கநாதரின் மற்றும் ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தின் மகிமையை, பிர்ம்மாண்ட புராணத்தின் ஆதாரத்துடன் மாரத்தி மொழியில் ஸ்ரீரங்கநாத மகிமை என்னும் நூலை எழுதியிருக்கிறார்.

கங்காதரகவி தஞ்சை நகரத்தில் பிரசன்ன வெங்கடேசர் சன்னிதியில் வாழ்ந்தவர். இவ்விபரம் ஆசிரியரின் தன் பாகவதம் தசமஸ் கந்தத்தில் குறிப்பிட்டிருக்கிறார். அதில் சகவருஷம் *1688* மார்கழிமாதம் சுக்லதுவாதசி சனிக்கிழமை ஆரம்பித்து சகம் *1694* பாத்தரதமாதம் கிருஷ்ணபட்ச அஷ்டமி, ஞாயிறு அன்று முடித்திருப்பதாக கூறியிருக்கிறார். இதிலிருந்து இவர் கி. பி. *1735—1772* வரை வாழ்ந்திருந்தவிபரம் தெரிகிறது. கங்காதரரின் தந்தை ருக்மாங்கதகவி தாயார் பெயர் தெரியவில்லை. இவர் ஆராதனை தெய்வம் ஸ்ரீராமர், குரு, சிவராமயோகி.

ஸ்ரீரங்கநாத மகிமை என்றும் மான்மியநூல் நூலகத்தில் இரண்டு சுவடிகள் இருக்கின்றன. அவை D. No. *638, 639*, ஆகும்.

இந்நூல் பத்து அத்தியாயங்களாக அமைக்கப்பட்டிருக்கின்றன. மராத்தி மொழி சந்தமான ஓவி என்னும் வடித்தில் எழுதப்பட்டிருக்கின்றன.

பழமையான காகிதச் சுவடியில் நல்ல கருமையான மையினால் தேவநாகரி எழுத்து மிக நன்றாகவும் அழகாகவும் எழுதப்பட்டிருக்கிறது.

ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தின் மகிமை, சந்திரபுஷ்கரணியின் பெருமை மற்றும் ஸ்ரீரங்கநாதரின் கதைவிளக்கம் யாவும் மிக அழகாக கோர்வையுடனும் விவரிக்கப்பட்டு, சந்திரபுஷ்கரணி தீர்த்தமகிமை, வில்வதீர்த்தமகிமை, ஜம்புதீர்த்த மகிமை, அஸ்வதீர்த்த மகிமை, பலாஸதீர்த்த மகிமை, புன்னாக தீர்த்த மகிமை, வகுளதீர்த்த மகிமை, கடம்பதீர்த்த மகிமை, ஆம்ரதீர்த்த மகிமை என்னும் தலைப்புகளைக்கொடுத்து நூலை திறம்பட எழுதியிருக்கிறார்.

ஆசிரியரின் பிறமகான்மிய நூல்கள்

மகாராஷ்டிரத்தில் கோவில்கொண்டுள்ள சிவபெருமானின் அம்சமான கண்டோபா என்னும் மார்த்தாண்டபைரவர் என்னும் தெய்வத்திற்கு கோவில் அமைந்திருக்கிறது. அத்தெய்வம் மல்லாரி என்னும் அழைக்கப்படுகிறது. அம்மல்லாரி தெய்வத்திற்கு 'மல்லாரி மகாத்மியம்' என்ற நூலும் ஹிந்து மக்களுக்கு புனிதமெனக்கருதப்படும் கங்கை பாயும் காசி க்ஷேத்திரத்தின் மகிமையை புகழ்ந்து காசி மகாத்மியம் என்ற நூலும் மராத்தி மொழியில் இயற்றியிருக்கிறார். ஆக கங்காதரகவியின் மான்மிய நூல்கள் மூன்றாகும் ஆசிரியர் இந்நூல்களை எழுதியதன்மூலம் தன் தாய்மொழி மராத்திக்கு ஒரு சிறந்த பணியினை செய்திருப்பது அறிய முடிகிறது.

3) சேஷ கவி : கி. பி. 1735—1798

மேலே குறிப்பிட்ட நூல் ஆசிரியர் கங்காதரரின் மைந்தர் சேஷ்கவி என்பவர். இவரும் தந்தையைப் போலவே நூல்களைப்படைப்பதில் புலமை பெற்று இருந்தார். தஞ்சையை அரசு புரிந்த இரண்டாவது துளஜாமன்னர், அவர் சகோதரர் அமரசிம்மன் காலத்தில் இப்புலவர் வாழ்ந்து நூல்களை எழுதியிருக்கிறார்.

சேஷ கவியின் நூல்கள் :—

அற்புதகாண்டராமாயணம், துளசிமகாத்மியம், சத்யசந்த விஜயம் பாண்டுரங்கமகாத்மியம், குதிரை சாத்திரம், தஞ்சபுரிமான்மியம், ஹாலாஸ்ய மான்மியம் முதலியவைகள் ஆகும். இதில் தஞ்சபுரி மான்மியம் ஹாலாஸ்ய மான்மியம் பாண்டுரங்கன் மான்மியம், சத்யசந்தவிஜயம் ஆகிய நூல்களைப்பற்றி இங்கு காண்போம்.

தஞ்சபுரி மான் மியம் :—

'தஞ்சபுரி' என்பது தென் பாரதநாட்டில் புனித காவேரி அன்னை பாய்ந்து செழிப்படையச் செய்யும் சோழவள நாட்டின் தலையானதாக விளங்கும் தஞ்சாவூரின் இதிகாசப் பெயர் ஆகும். இத் தஞ்சையைப்

பற்றி புராண வரலாற்றை வடமொழியில் காணும் பவிஷ்யோத்திர புராணம் "பராசரக்ஷேத்திர மான்மியம், சமீவன மான்மியம் முதலியவைகளை ஆதாரமாகக் கொண்டு எழுதியிருக்கிறார். ஆசிரியர் இந்நூலில் ஓர் இடத்திலாவது (தஞ்சாபுரி மான்மியம்)' என்று குறிப்பிடவில்லை, இவர் சோழ கண்டவர்ணனம், சோடச சோழவர்ணனம் என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்.

சேஷகவி தஞ்சையை அரசு புரிந்த அமரசிம்ஹான் (கி. பி 1786—98) காலத்தில் வாழ்ந்தவர். மன்னரின் வேண்டு கோளின்படி இந்த நூல் எழுதிய தாக நூலின்கடைசியில் குறிப்பிடுகிறார். இந்நூல் ஆசிரியர் பதினாறு சோழர்களின் வரலாற்றை குறிப்பிட்டு கூறுகிறார். அவை—துலேத்துங்க சோழன், தேவ சோழன், சசிசேகர சோழன், சிவலிங்க சோழன், வீர சோழன், கரிகால சோழன், பீம சோழன், இராஜேந்திர சோழன், மார்க்கண்டேய சோழன், கல்யாண சோழன், பத்ர சோழன். என்பவர்களின் வரலாறுகும்.

ஆசிரியர் சோழர்களின் வரலாறுகளையும், அவர்கள் ஆட்சி முறை, தெய்வத்திற்குச் செய்த அரப்பணிகள் ஆகிய வற்றினைக் கூறி விவரித்திருக்கிறார். விசேஷமாக தஞ்சை பெரியகோவில் கட்டுவித்த வரலாற்றினை மிக அழகாக வர்ணித்தும், பிரகதீஸ்வரருக்கு செய்த அபிசேஷக ஆராதனை, குடமுழுக்கு விழாவின் சிறப்பினையும் மிகஅழகாக நயம்பட விவரித்திருக்கிறார்.
விழாவின் சிறப்பினையும் மிக அழகாக நயம்பட விவரித்திருக்கிறார்.

ஹாலாஸ்ய மான்மியம் :—

தமிழ்நாட்டில் பழமையான சிறப்புடைய மதுரையம்பதியில் கோவில் கொண்டுள்ள மீனாட்சி சுந்தரேஸ்வரார் திருவிளையாடலை வர்ணித்து, வடமொழியில் எழுதியிருக்கும் ஸ்காந்தபுராணத்தில் காணும் ஹாலாஸ்ய மகாத்திய நூலுக்கு மராத்தி மொழியாக்கம் செய்து மிக அழகாக எழுதியிருக்கிறார். இதில் சிவபெருமானின் அறுபத்துநான்கு திருவிளையாடல்களையும் தனித்தனியாக சிறப்பாக வர்ணிக்கப்பட்டிருப்பது ஒரு திறமையான செயல் ஆகும். ஆசிரியரின் இந்த மொழியாக்க நூல்கள், மராத்தியமொழியினர் தென் நாட்டில் கோவில்கள், மற்றும் வரலாற்றை அறிந்துகொள்ள மிகவும் பயனுள்ளதாக அமைந்திருக்கின்றன, சேஷகவியின் இதர மான்மிய நூல்கள் மகாராஷ்டிரத்தில் பண்டரீபுரம் என்னும் க்ஷேத்திரத்தில் கோவில்கொண்டுள்ள பாண்டுரங்கன் மான்மியமும், துளசியின் பெருமை அதன் வரலாறு, இவைகளை வர்ணித்து கூறும் துளசி மான்மியமும் சிறப்புடையதாகும்.

தஞ்சையில் அமரசிம்மமன்னர் அரசுபுரிந்த காலத்தில் தஞ்சைக்கு வருகை தந்த மத்வசம்பிரதாய பீடாதிபதி ஸ்ரீ சத்யசந்த தீர்த்தரின் வரலாற்றையும், அம்மகான் தஞ்சை அரண்மனையில் செய்த ஸ்ரீ கோதாண்ட ராமரின் விசேஷ பூஜைவைபவத்தையும் வர்ணித்து 'சத்ய சந்தவிஜயம்' என்னும் தலைப்பில் ஒரு நூல் மிக அழகாக எழுதி மகானை கௌரவப்படுத்திருக்கிறார்,

4) ராகவசுத கவி : கி. பி. 1780—1834

இவரின் உண்மையான பெயர் தெரியவில்லை. ராகவசுத என்றுதான் எழுதிய நூலில் கூறிக்கொள்கிறார். ராகவ என்பது கவியின் தந்தையின் பெயர், அவர் மைந்தன் என்று தன்னைக் கூறிக்கொள்ள ராகவசுதன் என்று உணர்த்துகிறார். இவர் காலம் கி. பி. 1790 1834 எனத் தெரிகிறது. இவர் எழுதிய மான்மிய நூலைப்பற்றி கீழே காண்போம்.

கும்பகோண மான்மியம் :—

ஆசிரியர் கும்பகோண மான்மியம் என்னும் நூலை வடமொழியில் காணும் பிர்மாண்ட புராணத்தை ஆதாரமாகக் கொண்டு மராத்திமொழி யாக்கம் செய்திருக்கிறார். கும்பகோண க்ஷேத்திர மகிமை அங்குள்ள முக்கிய கோவில்களான கும்பேஸ்வரர் சாரங்கபாணி, சக்ரபாணி, நாகேஸ்வரர் போன்ற கோவில்கள் வரலாற்றையும் தீர்த்த மகிமையையும் மகாமக மகிமை யையும் வர்ணித்து கூறியிருக்கிறார். இந்த கும்கோண மான்மியம் சகவருஷம் 1756 ஜெயவருஷம் ஆவணிமாதம் கிருஷ்ணபட்சம், ரேவதி நட்சத்திரம் கூடிய திங்கள் கிழமை இப்புனிதமான மான்மிய நூல் எழுதி முடிக்கப்பட்டது என்று கூறுகிறார். இந்த ஆசிரியரின் மற்ற படைப்புகள் ஏதும் நமக்கு காணக்கிடைக்கவில்லை. ஆகையால் இந்நூல் ஆசிரியரின் வரலாறு முழுமையாக கூறமுடியவில்லை.

5) விருபாட்ச கவி : கி. பி. 1800—1835

விருபாட்சகவி தஞ்சையை அரசுபுரிந்த இரண்டாவது சரபோஜிமன்னர் காலத்தில் வாழ்ந்தவர். மன்னரின் வேண்டுகோளின்படி பல நூல்களை வட மொழியிலிருந்து மொழி பெயர்த்து எழுதியிருக்கிறார். அதில் மான்மிய நூல்கள் பலவாகும். இந்நூல்களைப்பற்றி கீழே காண்போம்.

1) ஆதிகைலாஸ மகான்மியம் :—

வடமொழி ஸ்காந்த சனத்குமாரசம்ஹிதா சிவரகஸ்யஸ்தோத் திரத்தின் ஆதாரத்துடன் இயற்றிய நூல்,

2) மாகமகான்மியம் :—

வடமொழி பத்மபுராணத்தின் ஆதாரத்துடன். எழுதியது

3) அக்னீஸ்வர மான்மியம் :—

வடமொழி பவிஷ்யோத்தி புராணத்தின் ஆதாரத்துடன் எழுதியது ஆகும்.

இம்மான்மியம் தமிழ்நாட்டில் தஞ்சை மாவட்டத்தில் காவேரியின் வடகரையில் கஞ்சனூர் என்னும் ஸ்தலத்தில் அமைந்துள்ள அக்நீஸ்வரர் வரலாறை விவரிப்பதாகும். கஞ்சனூரில் சிவபெருமானுக்கு ஆக்னீஸ்வரர் என்ற பெயரும் வழங்குகிறது. அங்குள்ள தீர்த்தம் அக்னீஸ்வர தீர்த்தம். ஹரதந்த சிவாச்சாரியார் என்னும் சைவப் பெரியார் சைவத்தின் பெருமையை நிலைநாட்டிய ஸ்தலம். இந்த ஸ்தலத்தின் மான்மியத்தை இந்நூல் ஆசிரியர் மிக அழகாக வர்ணித்து எழுதியிருக்கிறார். இந்நூல் சரபோஜிமன்னர் வாழ்ந்த காலத்தில் விரோதி வருஷம், சிவராத்திரி அன்று இப்புனிதமான நூலை எழுதியதாக நூல் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

4) பஞ்நத மான்மியம் :—

வடமொழியில் காணும பிரம்மகைவர்த்த புராணத்தின் ஆதாரத்துடன் பஞ்சநத மான்மியம என்றும் திருவையாற்றில் கோவில்கொண்டிருக்கும் பஞ்சநத ஈஸ்வரர் வரலாறும், காவேரி நதியின் பெருமையையும் விவரித்துக் கூறுகிறார். இப்பஞ்சநத மான்மிய நூலை இப்புலவர் கோவிந்தகவி மன் பவருடன் சேர்ந்து எழுதியிருக்கிறார். கோவிந்தகவி ஒன்று முதல் பதினைந்து அத்தியாயமும், விருபாட்சகவி பதினாறு முதல் ஐம்பத்தி ஐந்து அத்தியாயம் வரை நூலை எழுதியிருக்கிறார். இவ்விபரம் இந்நூலிலேயே குறிக்கப்பபட்டிருக்கிறது.

2) பஞ்சநத மான்மியம் :—

அவதூத என்ற பெரியார் திருவையாற்றுப் புராணத்தை பஞ்சநத மான்மியம் என்று மராத்தி மொழியில் எழுதியிருக்கிறார்.

5) பக்தவிலாசம் :—

தமிழில் சேக்கிழார் பெருமான் சைவ சமயக் குரவர்கள் அறுபத்து மூவரைப் பற்றி பெரிய புராணம் என்னும் தலைப்பில் வரலாறு எழுதினர். அதைஆதாரமாகக் கொண்டும். வடமொழியில் உபமன்யு எழுதிய சிவபக்த விலாசத்தை ஆதாரமாகக் கொண்டும் மராத்தியில் 'பக்தவிலாசம் என்னும் தலைப்பில் நூல் ஆசிரியர் எழுதியிருக்கிறார். மராத்தி சந்தமான 'ஓவி' என்னும் சந்தத்தில் எளிய நடையில் மிக அழகாக எழுதியிருக்கிறார். தமிழ் சிவனடியார்கள் வரலாறு மராத்தி மாநிலமக்களும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் எழுதியது என்பது பெருமை கொள்ள வேண்டியது ஆகும்.

6) தியாகராஜ கவி :—

தியாகராஜ கவியின் தந்தையின் பெயர் வெங்கடேச கவி, இவருடைய காலம் மற்றவிபரம் ஏதும் தெரிய வில்லை. தியாகராஜ கவியின் நூல் சிதம்பர மான்மியம் என்பதாகும். இம்மான்மிய நூல் வடமொழியில் காணும் ஸ்காந்த

புராணத்தில் உள்ள சனத்குமாரசம்ஹிதாயின் ஆதாரத்துடன் எழுதப்பட்ட தாகும். ஆசிரியர் இதை பதினான்கு அத்தியாயமாகப் பிரித்து ஒவ்வொன்றிற் கும் தனித்தனி தலைப்பு கொடுத்து நூலை எழுதியிருக்கிறார். மராத்தி மொழியின் 'ஓவி' என்னும் சந்தத்தில் அமைத்து எளிமையான மொழியில் கோர்வையான வாக்கியங்களையும் எதுகைமோனையுடன் சிர்களை அமைத்து வெகு அழகாக எழுதியிருக்கிறார்.

இந்நூல் சிதம்பரஸ்தலமான புண்டரிக புரத்தின் பெருமை, சிவகங்கை யின் மகிமை, மூவாயிரம் அந்தணர்களின் பெருமை, மற்றும் பதஞ்சலி, வியாக்ர பாதர் வரலாறு, தில்லைவன வரலாறு, சோமவர்மா, சிவசர்மா வரலாறு, புண்டரிக புரத்தில் வாழும் மக்கள், சிவபதம் அடைந்த வரலாறு போன்ற விஷயங்களைத் தொகுத்து எழுதி நூலே முடித்துள்ளார்

ஆசிரியர் இந்நூல் எழுதியதால் மகாராஷ்டிய அன்பர்கள், சிதம்பரத் தின் பெருமையை அறிந்து கொள்ள மிகவும் பயனுடையதாக அமைந்திருக் கிறது என்று கூறலாம்.

7) கோனேரி நரசிம்மர் :—

இந்த ஆசிரியர் வேலூரில் கோவில் கொண்டுள்ள சிவாலயத்தின் வரலாற்றை இருபது அத்தியாயங்களில் எழுதியிருக்கிறார். வடமொழி ஸ்காந்த புராணம், சிம்மாத்திரி காண்டத்தின் ஆதாரத்துடன் எழுதியிக்கிறார். நூல் ஆசிரியர் மாரத்தி ஓவி சந்தத்தில் மிக அழகாக மொழியாக்கம் செய்து எழுதியிருக்கிறார்.

ஆசிரியரின், பெற்றோர், பெயர்கள் நூலில் காணப்படவில்லை. முன்பு கூறிய ருக்மாங்கத கவியின் பேரர் சேஷகவி என்பவருக்கு கோனேரி ஆத்மஜ, அதாவது கோனேரியின் மைந்தன் எனப்பொருள் படும்படி தன்னேக்கூறிக் கொண்டு 'சத்யசந்த விஜயம்' என்னும் நூலை எழுதியிருக்கிறார். அந்த கோனேரி என்பவரின் வழித்தோன்றலாக இந்த கோனேரி நரசிம்ம கவியும் இருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.

II சிவனடியார்கள் வரலாறு :—

1) பட்டணம் பிள்ளைச் சரித்திரம் (பட்டிணத்தார்) :—

இந்நூலின் ஆசிரியர் மேருஸ்வாமி என்னும் புலவர் தஞ்சையில் ஸ்தாபிக்கப்பட்ட ராமதாஸசம்பிரதாய மடத்தைச் சேர்ந்தவர். மன்னார்குடி யில் அமைந்த அனந்தமௌனிராமதாஸிமடத்தின் சிஷ்யர், மராத்தியில் பல பக்தி நீதி ஸ்துதி பாடல்களே இயற்றியிருக்கிறார்.

தமிழ் மொழியில் சிறந்து விளங்கும் பட்டிணத்தார் வரலாற்றை மராத்தி மொழியில் நிருபணம் (ஹரிகதை) செய்யும் பாணியில் மிகச் சிறப்பாக இயற்றி தமிழ் சிவனடியாரைப் போற்றி இருக்கிறார்.

2) ஸ்ரீயாள சரித்திரம் (சிறுத்தொண்ட நாயனார்) :—

இந்நூலின் ஆசிரியர் ரேணுகாதாஸர் இப் புலவர் தஞ்சையை அரசு புரிந்த சாஹஜி மன்னர் காலத்தவர். நூல் எழுதிய ஆண்டு கி. 1708 ஆகும் சேக்கிழார் தமிழில் எழுதிய பெரிய புராணத்தில் காணும் சிறுத்தொண்டர் வரலாற்றை மராத்தி மொழியில் ஸ்ரீயாளசரித்திரம் என்ற தலைப்பில் மராத்தி ஓவி சந்தத்தில் மிக அழகாக எழுதியிருக்கிறார். ஆசிரியர், கதைத் தொடர் சிறிதும் விட்டுப் போகாமாலும், எளிதில் புரியும்படியாகவும் அமைத்திருக்கிறார். இவர் தன் வாக்கியத்தில் மிகவும் பழமையான சொற்களைப் புகுத்தியிருக்கிறார். சேக்கிழாரின் பரஞ்சோதியார் வரலாற்றுக்கும் இவர் வரலாற்றுக்கும் சிற்சில வேறுபாடுகள் காணப்படுகின்றன.

3) சுசரிதன் வரலாறு :

இந்நூல் 'சுசரிதன்' என்னும் அந்தணச் சிறுவன் ஒருவன், திருவையாற்றில் கோவில் கொண்டுள்ள பஞ்சுநதீஸ்வரரை வணங்கி, சிவபெருமானின் அருளால் தனக்கு ஏற்பட்ட யமபயம் நீங்கி, சிறப்புடன் வாழ்ந்து முடிவில் சிவபதம் அடைந்த வரலாற்றை கூறும் கதையாகும்.

இச் சைவபுராண வரலாறு, தமிழ்மொழியில், திருவையாற்றுப் புராணம் என்னும் தலைப்பில் காணப்படும் நூலில் உள்ள இந்திராத்தியயம் ஆலைச்சருக்கம் பகுதியில் சுசரிதன் வரலாறு காணப்படுகிறது. இப்புராணம் வடமொழியில் காணும் பஞ்சநதமகாத்மியம், என்னும் நூலிலிருந்து தமிழாக்கம் செய்துள்ளதாக நூலில் காணும் புராணக் குறிப்பிலிருந்து அறிய முடிகிறது.

இதேபோல் வடமொழியில் காணும் 'பஞ்சநதமாத்மியம் நூலைப் பார்த்து மராத்தியில் சுசரிதன் ஆக்யானம், எழுதப்பட்டிருக்கிறது இக்கதை மராத்தி இலக்கியத்தில் நிரூபணம் என்றும் அமைப்பில் அமைக்கப் பட்டிருகிறது.

இச் சிறு புராணவரலாற்றை மராத்தி மொழியில் எழுதியவர் 'வாசுதேவர்' என்பவர், நூலில் இவரைப் பற்றி விவரம் ஏதும் காணப்படவில்லை. வாசுதேவர் என்ற பெயரில் எழுதப்பட்ட வேறு நூல்கள் நம் நூல் நிலையத்தில் காணப்படுகின்றன. அவை 'மன்னன் ஷஹஜியின் பேரில் சிருங்காரம் பாடல்கள், 'பூஜலாதி பரீட்சை: கானியமர்த்தனம்' என்பன ஆகும் இந்நூல்களிலும் வாசுதேவர் பற்றிய விபரமும் தெரியவில்லை. ஆகையால் இந்நூல் ஆசிரியரைப்பற்றி குறிப்பு எழுத முடியவில்லை,

தமிழ் நாட்டில் சிறப்புடன் விளங்கும் திருவையாற்றில் கோவில் கொண்டுள்ள ஐயாறப்பனின் திருவிளையாடலை விளக்கும் இச்சிறு நூலை ஆசிரியர் தனது தாய் மொழியான மராத்தியில் எழுதி தமிழ்நாட்டின் சிறப்பை தன்நாட்டினருக்கு தெரியவேண்டி செய்த பணி என் தெரிகிறது.

4) திரு நீலகண்ட நாயனார் :—

சேக்கிழார் பெருமானுரின் பெரியபுராணத்தில் கண்டுள்ள குயவனுர் சிவபக்தர் நீலகண்ட நாயனுர் வரலாற்றை மராத்தி மொழியில் மராத்திய இரு புலவர்கள் இயற்றியிருக்கிறுர்கள்,

சிவதாஸர் என்னும் மராத்தியமொழி புலவர் வெகு சிறப்பாக நீலகண்டர் வரலாற்றை ஹரிகதை செய்யும் பாணியில் இயற்றியிருக்கிறுர். இதில் நல்ல சங்கீத ராக தாளங்களுடன் அமைந்த பதம், மற்றும் மராத்தி விருத்தங்களான, அபங்கம், திண்டி, சாகி, லாவணி போன்றவைகள் அமைத்தும் நூலை சிறப்பாக எழுதியிருக்கிறுர். இவருடைய கதை சொல்லும் நடையும், வர்ணனையும் மிகவும் நேர்த்தியாகவும் நிகழ்சியை நேரில் காணும் உணர்வு ஏற்படும் வண்ணம் அமைந்திருக்கிறது.

இதே போன்று திருநீலகண்டர் வரலாற்றை மராத்திமொழியில் இரண்டாவது சரபோஜி மன்னர் அவையில் அலங்கரித்த ரங்கநாதகவி என்னும் புலவர் நீலகண்ட சரித்திரம் என்னும் தலைப்பில் ஹரிகதை செய்யும் பாணியில் அமைத்து வெகு சிறப்பாக இயற்றியிருக்கிறுர். இவரும் முன் கூறியபடி கதையை கோர்வையாகவும் உருக்கமாகவும் அமைத்து, சிறிய வர்ணனைகளாய் கேட்பவர் மனது லயிக்கும் வண்ணம் எழுதியிருக்கிறார். இந்நூலை தன்னை ஆதரிக்கும் மன்னர் சரபோஜியின் பெயரில் அங்கிதம் செய்திருக்கிறார்.

5) கண்ணப்ப நாயனார் சரித்திரம் :—

பெரிபுராணத்தில் வேடன் திண்ணப்பன் என்று கூறும் கண்ணப்ப நாயனார் வரலாற்றை மேலே குறிப்பிட்ட ரங்கநாதகவி என்னும் புலவர் ஹரிகதை செய்யும் பாணியில் அமைத்து எழுதியிருக்கிறார். இந்நூலும் முன்கூறியபடி சிறந்த வர்ணனைகளுடன் கதையைச் சிறப்பாகக் கூறி பக்திச் சுவையுடன் அமைத்திருக்கும் பாணி மிகவும்ப் போற்றத்தகுந்தது.

இவ்வாறு மராத்தி மொழி புலவர்கள் தமிழ் உலகம் கூறும் சைவப் பெரியார்களின் வரலாற்றை, தன் நாட்டவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும், என்ற நல்லெண்ணத்தில் மராத்தி மொழிக்கே சிறப்பாகக் கூறப் படும், நிரூபணம் என்னு ஹரிகதை செய்யும் பாணியில் அமைத்து எழுதி தமிழ்மொழிக்கு பெருமை சேர்த்திருக்கிறார்கள்.

III தீர்த்தமகிமை :—

மராத்தியமொழிப்புலவர்கள் தமிழகத்தில் இருக்கும் கோயில்களுக்கும் தமிழகத்தில் வாழ்ந்த சிவனடியார்களுக்கும், வரலாறு எழுதயதுபோல் புனித நீராடலுக்கும் வரலாறு படைத்தனர், அதை இங்கு காண்போம்.

1) துலாகாவேரி மகிமை :—

வடமொழி ஆக்நேய புராணத்தின் ஆதாரத்துடன் புனித காவேரியில் துலாமாதத்தில் நீராடுவது சிறப்பு என்பதனை விளக்கி கோவிந்தகவி என்னும் புலவர் துலாகாவேரி மகிமை என்னும் நூலை எழுதியிருக்கிறார்.

இதே துலாகாவேரியின் மகிமையை ரங்கநாத கவி என்னும் புலவரும் மராத்தியில் எழுதியிருக்கிறார்.

2) மாதத்தின் பெருமை :—

1) காாத்திகை மாதம் 2) தனுர்மாதம் என்னும் மார்கழி மாதம் 3) மாசிமாதம் 4) வைகாசி மாதம் 5) ஆவணிமாதம் போன்றவைப் பற்றியும் கூறும்நூல்கள் கிடைக்கின்றன.

மேலே கூறிய மாதங்களில் காவேரியில் புனித நீராடி தெய்வத்திற்கு விசேடமான பூஜைகளைச் செய்தும், தானதர்மங்களைச் செய்தால் எல்லா நன்மைகளும் வந்து சேரும் என்ற நம்பிக்கையுடன் செய்யும் விரதத்தின் மகிமையை குறித்து நூல்களை எழுதி பெருமை படைத்திருக்கிறார்கள்.

இவ்வாறு தஞ்சையில் வாழ்ந்த மராத்தி மொழிப்புலவர்கள், தமிழ் நாட்டில் சிறப்புடன் விளங்கி பெருமை வாய்ந்த திருக்கோவில்கள். சிவனடியார்கள், புனித நீராடல், காவேரி அன்னையின் புனிதஸ்தலங்கள், ஆகியவற்றின் வரலாற்றை, தங்கள் தாய்மொழியான மராத்தியில் மிகச் சிறப்பாக எழுதி தமிழ் மொழி இலக்கியத்திற்கு மதிப்பு அளித்து அதே நேரத்தில் மராத்தி மொழினருக்கு தமிழக்கத்தின் சிறப்பை தெரியப்படுத்திய செய்த பணியினை எவ்வளவு போற்றினாலும் தகும்.

இச்சிறந்த இலக்கியப் பணியினை தமிழ் நல்லுலகத்திற்கு தெரியப் படுத்தவே, தஞ்சை மராத்திய புலவர்களின் மான்மிய நூல்கள் என்னும் தலைப்பில் சிறுபுராண வரலாற்று கட்டுரையை தொகுத்துக் கொடுத்திருக்கிறேன். இது சீறிய முறையில் பயன்படும் என நம்புகிறோன்.

तंजावर मराठी कवींचे महात्म्य ग्रंथें

तंजावरांत भोसलघराणाचे राजे इ. स. १६७६ ला सिंहासनारूडझाले. पहिले राजे ह्मणून छत्रपति शिवाजिचे बंधु वेंकाजी पीठारोहण केले. त्यानांतर इ. स. १८५५ पर्यंत मराठेराजेंचे राज्यभार तंजावरांत चालू झाले. तंजावरचे सेवटले राजे शिवाजी-II होय.

तंजावर काहीं एकशेंऐशें वर्षपर्यंत मराठेंचें राज्यभारांत होते. ते काळांत तंजावर प्रांतांतहीं राजदर्भारांतहीं अनेक पंडितलोक राहून मराठींत अनेक वर्गांत ग्रंथरचना केले. ते वेदांत, पुराण, रामायण, भारत, भागवत, इतिहास, काव्य, नाटक, स्तोत्र, कोश, वैद्यक, कामशास्त्र व संगीत इत्यादि वर्गांत झाले.

महाराष्ट्राचे हेवढे दूर प्रदेशांत राहूनहीं कवीने मराठी भाषाचे महत्व-व रुचि ह्यावर दीर्घश्रद्धा व अभिमान टेवून त्यांचे रचना केले आहेत. ते त्यांचे-रचनावरूनथ समजून येईल

आतां तंजावर कवींचे पुराणमहात्म्य ग्रंथरचना बाबत्ती येते पाहुये.

तंजावर सरस्वतिमहाल ग्रंथालयांत मराठी विभागांत अनेक पुराणमहात्म्यग्रंथें पाहणेस मिळते. ते **क्षेत्रमहात्म्य, तीर्थमहात्म्य, शैवभक्तांचे महात्म्य** असे तीन विभाग करुये. आणि क्षेत्रमहात्म्यांत तमिळनाडूंतील क्षेत्रें व महाराष्ट्रांतील क्षेत्रें ह्मणूनही, तसेंच दक्षिणदेशांतील व उत्तरदेशांतील तीर्थमहात्म्य ह्मणूनही विभाग करुये. आणी तमिळनाडूंतील शैवभक्ताचे चरित्रहीं देण्यांत येतें.

I. **क्षेत्र महात्म्य :-** तमिळनाडूंतील.

१. **अग्नीश्वर महात्म्य :-** हे क्षेत्रमहात्म्यग्रंथ विरूपाक्ष ह्मणणार कवि भविष्योत्तर पुराणाचे आधाराने लिहिले आहेत. हे क्षेत्रांतील शिवाला अग्नीश्वर

ह्मणून नाव. देवी कर्णघनायकी. पुण्यतीर्थ - अग्नितीर्थ ह्मणून नाव. येथें नटराज व देवी शिवकामी शिलारूपात अहेत. हे क्षेत्र अग्निदेव ब्रह्माला पूजा केलेते स्थल. हरदत्तशिवाचार्य ह्मणावयाचे शिवयोगी शैवभक्तीचे महिना प्रदर्शन केलेते क्षेत्र. ह्यांचे समाधीहीं येथेंच आहे.

तंजावर राजे शरभोजी II चे काळांतील विरूपाक्षकवि हे प्रचंडग्रंथ १ - १७ अध्यायांत वोवीवृत्तांत लिहिले आहेत.

ते सांगतात

"चोळदेशाधिपति सद्‌गुणसंपन्न शरभेंद्रनृपाज्ञानें विरूपाक्षें हा ग्रंथ रचिला। चंद्राक्षमुनि कलाधर, गणितशकीं पैं विरोधि शुभवर्षी, शिवरात्रीचे दिवसीं लिहिलासे ग्रंथ" ॥

२. **आदिकैलास महात्म्य :-**

हे ग्रंथहीं विरुपाक्षकवीने स्कांदमहापुराणाचे शिवरहस्योत्तरखडांतर्गताचे आधाराने ओवी वृत्तांत लिहिले. ह्याचा अध्याय १ - ३० होतात. त्यांत कवी सांगतात.

श्रीशरभेंद्र आज्ञेनें शक १७५० सर्वधारी संवत्छर श्रावणमासीं आरंभिले विरुपाक्षकवीने.

३. **कुंभकोण महात्म्य :-**

हे क्षेत्रपुराणमहात्म्यग्रंथ राघवसुत ह्मणणार कवि लिहिले आहेत. ते ब्रह्मांडपुराण - स्थानवैभवखंडाचे महात्म्याचे आधाराने लिहिले आहेत. राघवसुताचे वडीलांचे नाव राघोजी घाडिके सर्व्येराव, आईचे नाव मैनाबाई, कवी वडीलांचे नावमात्र जाणून देतात. त्यांचेनाव कोठेही कळविलेनाहीत वडील राघवाचे नाव घेवून त्यांचे सुत ह्मणून मात्र समजवितात.

हे राघवसुतकवि तंजावर राजाशरभोजी II चे काळांतीले. ते माहिती कवि आणवितात :-

महाराज शरभ महीश्वर । राज्य पाळिकें श्रीरामा बरोबर ।
त्या पुण्य श्लोकाचा मी किंकर । गुण अपार न वर्णवे ।। -१७

अहल्याबाई तयाची मुख्य राणी । सद्‌गुणसदाचार तपदयेची खाणी ।
कीं प्रत्यक्ष इंदिरा शवीणी । त्या दंपतीच्या पदीं मत्छिर ।। -१८

कुंभकोणपुराण - कावेरीनदीचे दक्षिणकांठीं आहेते कुंभकोण क्षेत्रांतील कुंभेश्वर शिवाचे महिमा व विष्णुस्थानांचे महिमा सर्व विस्तारकरून सांगून कावेरी नदीचे महिमा व बारावर्षांला एक वेळ यावयाचे 'महामह' ह्मणावयाचे मेळाचे महत्व ह्मणजे माघ महिन्यांतील विशेष तीर्थस्नान महात्म्य बाबत्तीचे वर्णन इत्यादि अतिविस्ताराने केले आहेत.

कवीने "कुंभकोणपुराण महात्म्य ग्रंथ शक सत्तराशें हे छपन्न । जयवत्सर वद्य श्रावण । रेवती सोमवारीं शोभन । ग्रंथपावन पूर्णझाला ।"
असे सांगतात.

४. [1]तंजपुरि महात्म्य :-

तंजपुरी, दक्षिण भारतांत चोळदेशांत कावेरीचीतीरी आहेते तंजावराचे इतिहासाची नाव आहे. काशीपुरी, अयोध्यापुरी सारखेच तंजपुरी ब्रह्मांडपुराणांत वर्णन करण्यांत येथें. तंजापुरीला, विजयपुरी, दक्षिण अळकापुरी, कुबेरपुरी असेही पुराण ग्रंथांत वर्णन केला आहे.

तंजपुरीचा इतिहाससंमतीची माहिती संस्कृत ग्रंथ भविष्यपुराण, ब्रह्मांडपुराण, शमीवनमहात्म्य, बृहदीश्वरमहात्म्य, पराशरमहात्म्य व चोळचंपू इत्यादि महात्म्यांत वर्णन करण्यांत येथें.

हे तंजपुरीमहात्म्य ग्रंथाची कर्ता सुप्रसिद्ध रुह्मांगदकवीचे नातू व गंगाधर कवीचे मुलगा शेषकवी होय. कवी, हे तंजपुरीमहात्म्य ग्रंथ, तंजावर भोसल-राजे अमरसिंहाचे विनंतीबर लिहिले आहेत. ते काळ इ स १७८८ ते १७९८ पर्यंत होतात.

शेषकवि सोवळा चोळराज़ें चे चरित्र संग्रहकरुन, चोळराजचरित्र ह्मणूनहीं, कुलोत्तुंगचोळ तंजावरी शिवालय निर्माणकरून, त्याचा कुंभाभिषक व पूजा केलेले समारंभ अति विस्ताराने वर्णन करूनहीं लिहून त्याला षोडशचोळवर्णन ह्मणून नाव टेविले. तेच तंजपुरीमहात्म्य ह्मणून सांगण्यांत अले. ते तंजपुरीं महात्म्य ग्रंथ ओवी वृत्तांत १ – ३० प्रसंगात लिहिले आहेत.

हे षोडश चोळराजांचे महात्म्यावरुन चोळदेशांचे महिमा व राजांचे नीती राज्यभारकेलेते पद्धती, आणि राजेंचे शिवभक्ती, व त्यांचे कलाकौसल्याचे महिती सर्व समाजण्यांत येथें.

५. [2]श्रीरंगनाथ महिमा :–

श्रीरंगनाथ महिमा ह्मणजे, दक्षिण भारतांत तमिळनाडूंत कावेरीतीरांत 'श्रीरंग' ह्मणावयाचे नावाने श्रीमन्नारायण शेषशाईरूपाने सर्वंना दर्शन देत अहेत. ते श्रीरंगक्षेत्राचे पुराणवर्णन होय.

हे श्रीरंगक्षेत्राचे पुराणमाहिता ब्रह्मांडपुराणांत 'महेश्वर नारद संवाद' ह्या विभागांत 'श्रीरंगमहात्म्य', ह्मणून जाणविला आहे. ते ब्रह्मांडपुराणाचे संमतीने 'श्रीरंगनाथमहिमा', ह्मणून सुप्रसिद्ध तंजावर कवि रुक्मांगदाचे मुलगा गंगाधरकवि ओवि वृत्तांत १ – १० अध्यायात रचिले आहेत.

श्रीरंगनाथ पुराणसंमती कथा - श्रीरामचंद्रप्रभूकडे प्रेमाचे भक्षीस ह्मणून लंकाधिपति विभीषण घेतलेले श्रीरंगशाईर्भूति, कावेरी नदीचेतीरी टेविले. ते दिनपासून तेथेंच ते चिरस्थायी झाली. चोळदेशाची राजा धर्मवर्मा ते मूर्तीला पूजाकरून गौरव केले. त्यानंतर अनेकराजे, भक्त ते मूर्तीला, आराधना करण्यांत आले. आजही हे क्षेत्र 'भूलोकवैकुंठ' ह्मणून विशेष गौरवाने मानण्यांत येते.

६. [3]त्यागेश महात्म्य :-

तंजावर जिल्लांतील तिरुवारूर क्षेत्रांतील शिवालयांत आहेते उत्सवमूर्तीला 'त्यागराजा' ह्मणून नाव आहे.

ह्या त्यागराजमूर्तीची महीमा वर्णन केलेल्या कवी रामपंडित. रामपंडित कवि, तंजावर सुप्रसिद्ध रामदासी माधवस्वामीचे जेष्टमुलगा होय. कवी गीर्वाण भाषांतील स्कंदपुराणाचे आधाराने हे महात्म्यग्रंथ लिहिले आहेत.

हे त्यागराज महात्म्य १ ते ६ अध्यायाबरोबर ४७ ओवीचा त्यागराज ध्यान व १२१ ओवीचा त्यागराज आगमोक्तध्यान हे दोन ग्रंथही ह्या बरोबर संग्रह केला आहे.

हे त्यागराजमहात्म्य, श्रीत्यागराज विटंकमूर्तौं, चोळदेशाचे मुचकुंदराजा त्याचा अतीत भक्तीचे द्वारा देवालोकांत इंद्राकडून, भूलोकाला आणून त्याला चोळराजधनी तंजावर प्रांती तिरुवारूर क्षेत्री शिवसंनिदि टेवून पूजा, उत्सव केलेते विशेष माहितीचे वर्णन कवि येतें केले आहेत.

७. **हालास्य क्षेत्र महात्म्य** :-

तमिळनाडूतील मथुरे ह्मणावयाचे सुप्रसिद्ध पुरातन नगरांत निर्माण झालेले शिवाचे लीलावर्णनग्रंथ 'हालास्य महात्म्य' होय. हे पुराणग्रंथ स्कांदपुराण अगस्त्यसंहिता ह्याच्या आधाराने शेषकविने लिहिले आहेत. शेषकवि सुप्रसिद्ध रुक्मांदकवीचे नातू व गंगाधरकवीचे जेष्ट मुलगा.

शेषकवि हे पुराणग्रंथ संस्कृतमूलाला अनसरुन शिवाचे चौषष्ट लीला वर्णन, अति मनोरंजकवणी केले आहेत. हे शिवालय दक्षिणभारतांतच अति मोठा आणि सुंदर होय. शिवाचे नाव सुंदरेश्वर-देवी मीनाक्षी. कवि हे कथावर्णन १ - ७१ अध्यायांत ओवी वृत्तांत लिहिले आहेत. हे मीनाक्षीदेवीचे स्थान, ललिता सहस्त्रनामस्तोत्रांत 'सहस्त्रदल पद्मस्थायिने नमः' ह्मणून संबोधन करण्यांत येते.

८. **चिदंबर महात्म्य :-**

त्यागराज ह्मणणार कवि चिदंबरक्षेत्रमहात्म्य, स्कांदपुराण सनत्कुमार संहिताचे आधाराने मराठींत लिहिले आहेत. हे ग्रंथ, कवि ओवींवृत्तांत १–४१ अध्यायांत अतिसुंदरवणि लिहिले आहेत.

चिदंबर ह्मणावयाचे पुरातन स्थळ तमिळनाडूंत आहे. ह्या स्थळाला पुंढरीकपुर ह्मणूनहीं सांगण्यांत येते. चिदंबरक्षेत्रांतील शिवाचे उत्सवमूर्तीला 'नटराज' ह्मणून नाव. हे नटराज मूर्तींच नृत्य शास्त्राला आधार ह्मणून मानण्यांत येते. हे क्षेत्रांत तीन हजार ब्राह्मण पूजारीकुठुंभ राहून नठराज-मूर्तींचे सेवाकरीत आहेत. येथील शिवगंगातीर्थ स्थानाना विशेष ह्मणून मानन्यांत येते. [4]हे पुण्य क्षेत्रांत एक नर राहून नटराज मूर्तीला दर्शन घेतला ह्मणजे, त्याला मुक्तीसांराज्य मिळते 'ह्मणून पुराण वर्णन करते.

९. एळूर शिवालय महात्म्य :-

तमिळनाडूं उत्तर आर्कांढ जिल्लांत एळूर (वेळूर) ह्मणावयाचे गामीं एक शिवालय आहेत. त्या शिवालयाचे पुराणमहत्म्य कोनेरनरसिंह ह्मणावयाचे कवि, स्कांदपुराणाचे सिह्मांद्रीखंडाचे आधाराने वोवीवृत्तांत लिहिले आहेत. कवी ते ग्रंथ १–२० अध्यायांत अतिसुंदर वर्णननाने लिहिले आहेत. हे पुराणग्रंथाचे सेवटी असे वाक्य आहे - "हे कथा स्वर्गीचें रत्न तें आले क्षिति येळूरायाचेनि प्रसादें" असे आहे. हेग्रंथ लिहिलेले कोनेरी नरसिंहकवीचे माहिती, ग्रंथ लिहिलेले काळ, स्थळ इत्यादि विषायाचा महिती कांहीं समजून येत नाही.

II क्षेत्रमहात्म्य - महाराष्ट्रांतील

१. [5]पांडुरंग महात्म्य :-

गुरुदासकवि स्कांद आणि पद्मपुराणाचे आधाराने पंढरी क्षेत्रमहात्म्य, तीर्थमहात्म्य ह्मणून विभागकरून पांडुरंग व पुंडलीकाचे चरित्र वर्णनकरून निरूपण पद्धतींत लिहिले आहेत. हे गुरुदासकवि तंजावरांत एक रामदासी परंपरांतीले. तरि त्यांचा काळ इतर महितीं बाबत्तीकाहीं कळतनाहीं.

तसेच सेवककवींहीं 'पांडुरंगमहात्म्य' ह्मणून एक ग्रंथ स्कांद - उत्तर संहिताचा आधाराने ओवी वृत्तांत १ – १२ अध्यायांत लिहिले आहेत.

२. **मल्लारी महात्म्य :—**

तंजावर सुप्रसिद्धकवि माधवस्वामि. हे एक रामदासी पंडित. मल्लारी महात्म्य ग्रंथ ओवी वृत्तांत १-२२ अध्यायांत लिहिले. ह्याचा पूर्णग्रंथ ११०० होतात. कवी ब्रह्मांडपुराण क्षेत्रखंडावे आधाराने हे महात्म्य ग्रंथ भाषांतर केले आहेत. ते ग्रंथ रचिलेले काळ, इतर महिति बदल कावि सांगतात :-

शके १६१७ पावला नैं ग्रंथ समाप्तीस ।
ईश्वर संवत्सर फाल्गुनी पूर्णिमेस ।
आरंभकेला उपरी सप्तमी मंगळवारी ।
कावेरी तीर विवंदूरी ।
घटिका दहा प्रमित भारी जाहला दिवसां ।
तेव्हां महात्म्य संपविलें माधव विनवी करकमळे ॥

सुप्रसिद्ध रुक्मांगकवीचे मुलगा गंगाधर कवीहीं मल्लारीमहात्म्यग्रंथ ब्रह्मांडपुराण क्षेत्रखंडाचे आधाराने ओवी वृत्तांत १ – २२ अध्यायांत लिहिले आहेत.

III. **तीर्थ महात्म्य :—**

तमिळ नाडूंतील कावेरी नदीचे महत्वहीं त्या कावेरीचे तीरावर निर्माण झालेले पुण्य क्षेत्रांचे महत्वहीं तंजावर कवीने वर्णनकेले आहेत. ते येथें पाहुये.

१. **तुलाकावेरी महात्म्य :—**

रंगनाथकवि ह्मणणार तुला महिन्यांत कावेरीस्नान महिमा आग्नेय पुराणाचे आधाराने १-३० अध्यायांत वर्णन केले अहेत.

२. **पंचनद क्षेत्र महात्म्य :—**

विरूपाक्षकवि तंजावर समीप कवेरीनदीचे तीरावर आहेते पंचनदक्षेत्र महात्म्य व ते क्षेत्रांतील पंचनदईश्वर ह्या महिमा ब्रह्मकैवर्तपुराणाचे १ - ५५ अध्यायांत वर्णनकेले आहेत. तसेच गोविंदकवी व अवधूतकवीही हे क्षेत्राचे महात्म्य वर्णनकरून ग्रंथ लिहिले आहेत.

३. कमालय महात्म्य :—

तिरुवारूर ह्मणावयाचे शिवक्षेत्रांत आहेत सरोवर 'कमलालय' ह्मणून सांगण्यांत येतें. ते कमलालयाचा महात्म्य पद्मपुराणाचे आधाराने रामपंडितकवी १ - ३ अध्यायांत वर्णनकरून लिहिले आहेत.

४. काशी महात्म्य :—

भारतादेशाचे अतिपुनित नदि गंगामाता. ते गंगानदितीरांतील क्षेत्र काशीचे महात्म्य वर्णनकरून पद्मपुराण पाताळखंडाचे आधाराने १ - १३ अध्यायांत गंगाधरकवि वर्णनकरून लिहिले आहेत.

वर्षातील काहीं मुख्य महिन्यांत विशेष वणी करावयाचे स्नान, व्रत इत्यादिकाचे महात्म्यहीं वर्णनकरून कवीने ग्रंथ लिहिले आहेत. ते पद्मपुराणाचे आधाराने **कार्तिकमासमहात्म्य**, अग्नेयपुराणाचे आधाराने **धनुर्मासमहात्म्य**, पद्मपुराणाचे आधाराने **माघमासमहात्म्य**, स्कांदपुराणाचे आधाराने **वैशाक महात्म्य**, आणि स्कांदपुराणाचे आधाराने **श्रावणमासमहात्म्य** इत्यादि, रंगनाथकवि, विरूपाक्षकवि, गोविंदकवि, सारखेकवीने लिहिले आहेत.

IV. शिवभक्तांच चरित्र :—

१. भक्तविलास :—

तमिळनाडूंतील शिवभक्तांचे चरित्र संग्रहकरून; 'शिवभक्तविलास' नावाने 'चौषष्ट शिवभक्ततांचे' चरित्र 'शेक्किळार' ह्मणणारकवि एक मोठाग्रंथ लिहिले आहेत. तो स्कांदपुराणाचे आधाराने तंजावर कवि विरूपाक्ष, मराठीं. 'शिवभक्तविलास' अथवा 'भक्त विलास' ह्मणून लिहिले आहेत. ते ओवी वृत्त ग्रंथत अध्याय १ - ७९. हेच शिवमहात्म्य संस्कृतांत उपमन्यु ह्मणणार लिहिले आहेत.

२. नीलकंठ चरित्र :—

शिवभक्तविलासांतील एक कुलालचरित्र नीलकंठ चरित्र. हे चरित्र शरभोजी II चे नावाने आहे. हे निरूपण पध्दतींत रचिला आहे. तसेच

आणि एक ग्रंथ 'कुलालचरित्र' ह्मणून शिवदास ह्मणणार कवि लिहिले आहेत. ते ही निरूपण पद्धतींत लिहिले आहेत.

३. नीलभिल्ल चरित्र :—

शिवभक्त विलासांतील आणि एक चरित्र नील ह्मणणार भिल्लाचे चरित्र निरूपण पद्धतींत शरभोजीचे नावाने लिहिला आहे.

४. श्रीयाळ चरित्र :—

शिवभक्त विलासांतील आणि एक भक्त श्रीयाळ ह्मणणार. हे श्रीयाळाचा इतिहासचरित्र महाराष्ट्रांतील कवी श्रीधरस्वामि, अनंतदेव, उद्धवचिद्धन इत्यादि होय. तंजावरांतीलकवि रेणुकादास श्रीयाळचरित्र ह्मणून एक चमत्कार लेख लिहिले आहेत. ते १ - २५५ ओवीवृत्तात लिहिले आहेत.

श्रीयाळाचे जन्मस्थान व वासस्थान तंजावर जिल्लांतील 'तिरुचेंगाट्टांगुडी' ह्मणावयाचे शिवक्षेत्र होय. त्यास तमिळभाषांत 'परंजोतियार' ह्मणून बोलावण्यांत आले. त्यानी शैवकुलांत उपजले. विद्यासंपन्न होवून सात्वज्ञ झाले. सातवे शताब्दींत कांशी देशांत पल्लव राजांजवळी शेनापतिवणी असून, त्यांचाकरिता वातापिला जिंकून, तेथून एक गणपतीचे शिला विग्रह प्रथवणी तमिळनाडुला घेवून आणले. परंजोतीचे पराक्रम पाहून पल्लवराजा संतुष्ट होवून, त्याना अदीक धनदेवून 'शिवकैंकर्यकरीत असावे' ह्मणून व त्यानी वातापीहून आणलेले गणपति विग्रहहीं त्यांस देवून त्यांचे स्वस्थानास पाठविले.

परंजोती ह्यानी त्यांचे स्वस्थान तिरुचेंगाट्टांगुडीला परत येवून, गावांतील शिवालयांत गणपतीचे मूर्तीना स्थापना केले. सदा शिवध्यानपरायणवणी असून, अतितीस भोजनघालून शिवकैंकर्य करीत होते. त्याचें पत्नी व एकेच मुलगा चिलयाबरोबर आनंदाने होते.

परंजोतीचे (श्रीयाळ) शिवभक्तिचें महत्व प्रपंचास, प्रगटकरावे ह्मणून साक्षात्परमेश्वर भैरव वेष धरून परंजोतीचे घरास येवून नरमांस भिक्षामागीतले. वेषधारीचे वचनाप्रमाण परंजोति त्यांचे एकच बालकास वधकरून त्यांचे मांस पक्व

करून अतितींस भोजन तयार केले. तेममई अतितीवेषधारी शिव, परंजोतीस पाहून "बालक नाहीते घरीं आह्मी भिक्षा घेणे नियम नाही" असे ह्मणाले. त्यावेळी परंजोती ह्यानी अतितीला पाहून "आपणाचे मांगणी प्रमाणें आमचे एकेच बाळकास वधून त्याचा मांसाचे भोजन तयार केला आहे. तसे असता आपणाचे वचनाप्रमण बालक असणें कसे साध्य होईल? असे ह्मणाले. ते समई अतिती परंजोतीस पाहून तुह्मी बोलावल्यां ह्मणजे तुमचे बालक येयीले असे ह्मणाले.

परंजोती त्याप्रमाण पत्नीसह त्यांचे बाळकाचे नाव घेवून 'चिलया' ह्मणून बोलावले. तेवेळी दंपतीचे बालक चिलया घरास पळत आला. दंपत्तीस झालेले आनंदास सांगणेस काही गोष्टीनाहो. त्यावेळीं अतिती व मांस-भोजन नाहीसे होवून गगन प्रदेशीं पार्वती स्कंधासह शिववृषभारूड होहून दर्शन देवून अनुग्रह केले. परंजोतीयांचे अतीत भक्तीमुळे, त्यांस शिवलोकप्राप्त झाले. असें श्रीयाळाचे चरित्र वर्णन करण्यांत येथें.

५. पट्टिणंपिल्ले चरित्र :-

हे षट्टिणंपिल्ले ह्मणणार एक शिवभक्त. त्यांचे चरित्र तमिळभाषांत विस्ताराने वर्णन केला आहे. ते शिवभक्ताचे चरित्र तंजावर श्रीसमर्थ संप्रदायी श्रीअनंतमौनीचे शिष्य मेरुस्वामी ह्मणणार निरूपणवणी अति विस्ताराने केले आहेत.

असे तंजावर सरस्वतीमहाल ग्रंथासयांत मराठी विभागांत पुराण माहात्म्य ग्रंथ संग्रह होवून आहेत. त्यांचा ही थोडी माहिती सांगावे ह्या इच्छेने येथें हे लहानसे लेख लिहिण्यात आले. ते महाराष्ट्र संशोधकास उपयोग पडेल ह्मणून समजतों.

टि. आर. भीमराव,
मराठी पंडित.

வலம்புரிச் சங்கு

பண்டிட், தேதியூர் எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்,
மேனிலை சம்ஸ்கிருத பண்டிட்,
ஸரஸ்வதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

பலகோடி கடல்வாழ் உயிரினங்களில் சிப்பி, கிளிஞ்சல், ஆமை போன்று சங்கும் ஒருவகை உயிரினமே என்பது பலரும் அறிந்ததே. இதன் மேற்புற ஓட்டுப்பகுதி கனமான சுண்ணாம்புச் சத்தாலும், அடிப்பகுதி தகடுபோன்ற தசைப் பகுதியாலும் அமைந்துள்ளது.

இவ்வுயிரினம் பெரும்பாலும் பூமத்தியரேகைக்கு வடபுறமுள்ள கடற் படுகைகளில் தோன்றி வளர்ந்து வருகிறது. அதிலும் தென் தமிழ் நாட்டின் கடற்பகுதிகளிலும், சிலோனைச் சுற்றிலுமுள்ள கடற்பகுதிகளிலும் அதிகம் என்றும் சொல்லப்படுகிறது. ஆப்பிரிக்கக் கடற்பகுதிகளிலும்கூட இவ்வுயிரினம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. கடலின் ஆழமான படுகைகளிலேயே இவை அதிகம் தோன்றி வளரக்கூடியவை எனினும், சில விசேஷ ஸ்தலங்களில் உள்ள நீர்நிலைகளிலும் தோன்றி வளரக் கூடியவையென ஸ்தல புராண வரலாற்று நூல்கள் கூறும். மத்யப் பிரதேசத்திலுள்ள இந்தூருக்கருகே நதிகளிலும் சங்குகள் விளைவதாகச் சொல்லப்படுகிறது.

சங்குகளின் வகைகள்

சங்குகள் மூன்று வகைகள் எனப் பண்டைய நூல்களில் கூறப்பட்டுள்ளது. அவை இடம்பு(வ)ரி, வலம்பு(வ)ரி, சரஞ்ஜலம் என்பனவாகும். இவற்றுள் இடம்புரிச் சங்குகள் மிகஅதிக அளவில் விளையக்கூடியவை.

இடம்பு(வ)ரிச் சங்கு

குழித்த இடது கையில் சங்கை அதன் துவாரமுள்ள பகுதியை மேல்நோக்கியவண்ணம் வைத்தால் அதன் அகன்றுவளைந்த மத்யப்பகுதி இடதுகைக் கட்டைவிரலை ஒட்டியதாக இருக்குமாயின், மேலும் இடக்கைப் பெருவிரல் உள்ள பகுதியில் தொடங்கும் ரேகை இடப்புறமாக (anti clock wise)ச் சுற்றிச் சுழன்று அதன் நடுப்பகுதியை அடைவதாக இருக்குமாயின் அது இடம்பு(வ)ரிச் சங்கு ஆகும்.

வலம் பு(வ)ரிச் சங்கு

குழித்த வலது கையில் சங்கை அதன் துவாரமுள்ள பகுதியை மேல்நோக்கியவண்ணம் வைத்தால் அதன் அகன்ற வயிற்றுப்பகுதி வலதுகைக் கட்டைவிரலை ஒட்டியதாக இருக்குமாயின், மேலும் அக்கட்டைவிரலை ஒட்டிய சங்குப்பகுதியில் தொடங்கும் ரேகை (வரி) வலப்புறமாகச் (clock wise) சுற்றிச் சுழன்று நடுப்பகுதியை அடையுமாகில் அது வலம்[1]வரிச்சங்கு எனப்படும்.

சரஞ்ஜலம்

இது ஓராயிரம் வலம்புரிச் சங்குகளுக்கு இணையாகும். இவ்வகைச் சங்கின் இரு பக்கப்பகுதிகளிலும் தங்கத்தின் நிறம்போன்றதொரு ஒளி[2] இருக்கும் அல்லது வெண்மையாகவே இருப்பினும் உட்புறத்தில் மூன்று ரேகைகளுடன் இருக்கும். அம்மூன்று ரேகைகளும் மூன்று வேதங்களின் வடிவாகும் என்றும் ப்ரம்ம - விஷ்ணு - சிவன் எனும் மும்மூர்த்திகளின் வடிவாகும் என்றும் சொல்லப்படும். இவ்வகைச் சங்கில் அடிமுதல் நுனி வரையில் வலதுபுறமாகச் சுற்றும் ரேகை அமைந்திருக்கும். மிகமிக உயர்வான தெனக்கூறப்படும் இவ்வகைச் சங்கு ஒன்று இருப்பதாக நூல்கள் மூலமே அறியக்கிடைக்கிறது. கிடைக்கும் சங்குகளில் [3]வலம்புரிச்சங்குகளே மிகச் சிறந்ததாகும்.

---

1. आवर्तो दक्षिणे पार्श्वे यस्य स्याद्दक्षिणः स्मृतः ।
2. दक्षिणावर्तशङ्खानां सहस्राणां समः स्मृतः ।
"चरञ्जल" इति प्रोक्तः सर्वकार्यार्थसिद्धिदः ।
तपनीयसमा कान्तिः यस्य स्याच्छङ्खपार्श्वयोः ।
अथ श्वेतस्त्रिरेखान्तो ब्रह्मविष्णुशिवात्मकः ।
तिस्रो रेखान्तरे यस्य वेदत्रयस्वरूपकाः ।
आमूलान्तं तथाऽऽवर्तः स चरञ्जल संज्ञितः । —"शङ्खपरीक्षा"
3. दक्षिणावर्तशङ्खो वै शङ्खानामुत्तमोत्तमः । —"दक्षिणावर्तशङ्खकल्प:"

ஆயிரக்கணக்கான இடம்புரிச் சங்குகளில் ஒன்று வலம்புரியாக அமையலாம். அதுவே மற்ற சங்குகளுக்கெல்லாம் தலைவனாக மதிக்கப் படும் என்பதற்கு அடையாளமாக அது இன்னொரு இடம்புரிச் சங்கின்[1] மேல் அமர்ந்தவாறே நீரில் எண்ணற்ற சங்குகளிடையே பயமின்றி சஞ்சரிக்கும். புண்யப் பெருக்குள்ளவர்களே இவ்வகை வலம்புரிச் சங்கைப் பெறமுடிகிறது.

காதருகே வைத்துக்கேட்கின் ஓங்காரத்வனியைத்தரும் இவ்வலம்புரிச் சங்குகளிலும் பல பேதங்கள் உண்டு.

i. உருண்டையான, கனமான, வழவழப்பானதும், பால்போன்று வெண்மை நிறமுள்ளதும். பளபளப்புள்ளதுமான இவ்வகைச் சங்கு[2] மிகவுயர்ந்தது.

ii. கனமுள்ளதும் பளபளப்புடனும். வழவழப்பாயும் சற்றே மஞ்சள் நிறம் உள்ளதாயுமிருப்பவை. இவ்வகைச்சங்கு[3] நடுத்தரமானது.

iii. கனம்மிகுந்ததாயும் உள்ளும் புறமும் செந்நிறமுள்ளவை.

iv. கரடுமுரடாயும் ஒழுங்கற்றதாயும் கருமைநிறக்கலவையுடன் அதிகம் கனமுள்ளதாயும் உள்ளவை.

பொதுவாக வலம்புரிச்சங்கு பரிசுத்தமான இடங்களில் பாதுகாப் புடன் அதற்கெனக் கூறப்பட்டுள்ள பெட்டகத்தில்தான் வைத்துப் பராமரிக்க வேண்டும்.

12 பாகம் தங்கமும், 16 பாகம் வெள்ளியும் கலந்துசெய்யப்பட்ட தகட்டில் இப்படத்தில் காட்டியுள்ளதுபோல உல்லேகனம் செய்து (எழுதி) அத் தகட்டை வெள்ளிப் பெட்டியில்வைத்து அத்தகட்டின்மேல் வலம்புரிச்சங்கை வைத்துப் பாதுகாக்கவேண்டும்.

---

1. तस्यां शङ्खाः समुत्पन्ना वामावर्ताः सहस्रशः ।
तेषां मध्येऽपि राजाख्यो दक्षिणावर्ततां गतः ।
शङ्खारूढोऽपि सर्वत्र जले खेलति निर्भयः ।
तं कश्चित्पुण्ययोगेन प्राप्नोति पुरुषोत्तमः ॥

2. श्वेतवर्णो महान् भव्यः

3. पीतवर्णस्तु मध्यमः

வலம்புரிச் சங்குகளில் 25 முதல் 50 தோலா வரையில் எடையுள்ளது உயர்வானது. 12 முதல் 25 தோலா வரையில் எடையுள்ளது நடுத்தரமானது. 4 முதல் 11 தோலா வரையிலானது அதமம்.

வலம்புரிச் சங்குகள் யாவுமே பூஜைக்குரியன என்பதால் எடையும் பருமனும் அதிகமாக அதிகமாக உயர்ந்த தன்மையும் கூடும். ஆனால் அவை [1]பெரிய ஆலயங்களில்தான் பெரும்பாலும் வைத்துப் பராமரிக்கப்பட வேண்டும். அவற்றை வீடுகளில் வைத்திருக்கக்கூடாது என்பதில்லை. நடுத்தரமான அளவில், குற்றமற்றதாகவுள்ள சங்கை அதனை முறைப்படிப் பராமரித்துப் பூஜைசெய்யும் தகுதிகள் உள்ளவர் வைத்திருப்பதில் தவறில்லை. ஆர்வத்தின் காரணமாகப் பெரிய அளவினதான வலம்புரிச் சங்கை வீட்டில் வைத்துக்கொள்வது சரியல்ல. பொதுவாக வலம்புரிச் சங்கை வைத்துப் பராமரிக்க விரும்புவோர் தூய நடத்தை, மன மொழி மெய்யாலும் வாய்மை யுடனிருத்தல், தன்குல வழக்கப்படிக்கான வழிபாட்டில் ஈடுபடுவது, ஆத்ம திருப்தி போன்ற நற்குணங்கள் உள்ளவராக இருத்தல் அவசியம். "மிகவும் உயர்ந்தது" என்பதாலும், "அது இருக்குமிடத்தில் செல்வம், தான்யம் முதலானவை வளர்ச்சியுறும்" என்பதனைக் கேள்வியுற்றும் யார் வேண்டுமானாலும் அதை வைத்துக்கொள்வது என்கிற கொள்கை தவறாகும். சங்குகளுக்கு நம்மிடம் தங்கியிருக்க இஷ்டமிருந்தால்தான் நாமும் அதனைப் பராமரிக்க முடியும். தகுதி யில்லாதவர்களும், அதிகப் பருமனும் கனமும் தோஷமுள்ளதும் - வெள்ளி அல்லது தங்கத்தாலான கவசம்போடப்படாதது மான சங்கை வைத்திருப்பவர்களும் பல கஷ்டங்களுக்கு இலக்காகவேண்டி யிருக்கும்.

புண்ணிய பலத்தால் நல்ல பொருத்தமான வலம்புரிச் சங்கு கிடைத்து உரிய முறைப்படி வழிபாடு செய்யப்பட்டால் [2]செல்வ வசதிகள், தான்ய வளர்ச்சி, தொழில் முன்னேற்றம், நல்ல சந்ததி, ஆயுள் விருத்தி, ஆரோக்யம் யாவும் வளர்ச்சியுறும் என்பதில் ஐயமில்லை. ஆனால் அவை தினந்தோறும் உரிய மந்த்ரங்களைச் சொல்லி வாசனை திரவியங்கள்கொண்டு பூஜிக்கப்பட வேண்டும். தினந்தோறும் காலையில் ஒருமுறையாவது பூஜிப்பது அவசியம். பூஜைமுறை பொதுவானதே. ஆனால் வலம்புரிச் சங்கு பூஜைக்கான விசேஷ மந்த்ரங்களைப் பலரும் அறிந்திருக்க நியாயமில்லை யென்பதால் அவை மட்டும் கீழே தரப்படுகின்றன. வலம்புரிச் சங்கில் நீர் நிறைத்து —

---

1. यथा यथा वृद्धिमान्स्यात्तथाविधफलप्रद: ।
गृहीत्वा गुप्तसंस्थाने स्थेयो देवालये वरे ॥

2. आयुरारोग्यमैश्वर्यं पश्चपुत्रधनादिकम् ।
भवेद्यस्य गृहे शङ्खो दक्षिणावर्तनामक: ॥

ओं सर्वाभरणभूषिताय प्रशस्याङ्गोपाङ्गसंयुताय कल्पवृक्षाधःस्थिताय, कामधेनु-चिन्तामणिनवनिधिरूपाय चतुर्दशरत्नपरिवृताय महासिद्धिसहिताय लक्ष्मीदेवतायुताय कृष्ण-करलालिताय श्रीशङ्खमहानिधये नमः என்று சொல்லித் தியானம் செய்யவேண்டும்.

ओं सर्वतोभद्राय सर्वाभीष्टफलप्रदाय सर्वारिष्टदुष्टकष्टनिवारकाय कामितार्थ-प्रदाय शङ्खाय स्वाधिष्ठापकाय क्लीं स्वीं ब्लूं क्रों नमः स्वाहा என்று சொல்லிப் பிரதிஷ்டை செய்ய வேண்டும்.

शङ्खं चन्द्रार्कदैवत्यं कुक्षौ वरुणदैवतम् ।
पृष्ठे प्रजापतिश्चैव त्वग्रे गङ्गासरस्वती ॥ என்றும்,

ओं ह्रीं श्रीं क्लीं ब्लूं दक्षिणमुखाय शङ्खनिधये समुद्रप्रभवाय नमः என்றோ, ओं ह्रीं श्रीं क्लीं सुदक्षिणावर्तशङ्खाय नमः என்றோ மந்த்ரங்களைச் சொல்லியே, ஷோடச உபசாரபூஜை செய்யவேண்டும். பூஜையில் கங்காஜலமும், பச்சக்கற்பூரம், குங்குமப்பூ, சந்தனம் முதலான வாசனைத் திரவியங்களும் துளஸீ, வெண்ணிற வாசனை மலர்களும் அவசியம் இருக்க வேண்டும்.

त्वं पुरा सागरोत्पन्नो विष्णुना विधृतः करे ।
पूजितः सर्वदेवैश्च पाञ्चजन्य नमोऽस्तु ते ॥

त्रैलोक्ये यानि तीर्थानि वासुदेवस्य चाज्ञया ।
शङ्खे तिष्ठन्ति पक्षीन्द्र तस्माच्छङ्खं प्रपूजयेत् ॥ (கருடபுராணம்)

नमामि देवं सकलार्थसिद्धिदं
सुश्वेतवर्णं कमलासहोदरम् ।

क्षीरोदपुत्रं मनसोऽर्थदायकं

राज्यार्थसन्तानफलप्रदं भजे ॥

என்று நான்குமுறை சொல்லி நமஸ்காரம் செய்து,

कल्याणकारी दुरितापहारी

मनोऽर्थधारी घनविघ्नतारी ।

श्रीदक्षिणावर्त, सुरम्य, नाथ !

मनोरथं पूरय मे समग्रम् ॥

என்று பிரார்த்தனை செய்துகொண்டு சங்கிலுள்ள மிகப்புனிதமான நீரைச் சங்கிலிருந்து (சங்கை அசைக்காமல்) உத்தரணியால் அல்லது புதிய சிறு ஸ்பூன் உதவியால் எடுத்து ப்ரோக்ஷித்து (தன்மீது தெளித்து)க் கொள்ள வேண்டும். பிறருக்கும் ப்ரோக்ஷிக்கலாம்.

शङ्खमध्ये स्थितं तोयं भ्रामितं दैवतोपरि ।

अङ्गलग्नं मनुष्याणां ब्रह्महत्यादिकं हरेत् ॥

என்பது ப்ரோக்ஷணமந்த்ரம். பிறகு, நீர் நிறைந்த வலம்புரிச் சங்கத்தைப் பெட்டியுடன் பாதுகாப்பான இடத்தில் வைக்கவேண்டும்.

தற்போது கிடைக்கும் வலம்புரிச் சங்குகள் மூன்று வகையாகப் பிரித்துக் கூறப்படுகிறதுண்டு.

1. கணேச சங்கம்

உள்ளும் புறமும் சிகப்பு (செந்தூர நிற) முள்ளது. வால்புறம் சிறியதாக இருக்கும். "वृत्तत्वं स्निग्धताऽच्छत्वं शङ्खस्येति त्रयो गुणाः" என்றவாறு உருண்டையாக, பளபளப்புடன் நிர்மலமானதாக இருக்கும். இது கிடைப்பது மிகமிக அரிது என்றும் பாரதநாட்டிலேயே இவ்வகைச் சங்கு 5 அல்லது 7 மட்டுமே இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஒவ்வொன்றும் (காலரீதியில்) 25,000 ரூபாய் முதல் 50,000 ரூபாய் வரையில் மதிப்புள்ளது என்றும் சொல்லப்படுகிறது. இவ்வகைச் சங்குகள் தனுஷ்கோடி கடற்பகுதியில் கிடைக்கக்கூடியதாம்.

2. தேவீ சங்கம்

லேசான மஞ்சள் நிறம் அல்லது சிகப்பு நிறமுள்ளது. மஞ்சள் அல்லது சிகப்பு ரேகைகளுடன் இருக்கும். இவ்வகைச் சங்குகள் சிலோன் கடற்பகுதிகளில் கிடைக்கக்கூடியவையாம்.

3. விஷ்ணு சங்கம்

புறத்தே தூயவெண்மை நிறமும், உட்புறம் செந்தாமரையின் நிறமுடனும் உருண்டையாகப் பளபளப்புடன் இருக்கும். மிகவும் மதிப்பு மிக்க இச்சங்குகள் கன்னியாகுமரி கடற்பகுதிகளில் கிடைக்கக் கூடியதாம்.

சங்கபரீக்ஷா

உயர்ந்த பொருள் என்பதால் பண்டைக்காலம் தொட்டே இவ்வகை உயர்ந்த சங்குகளுக்குக் 'கிராக்கி' இருந்துவருவதால் செயற்கையான சங்குகள் நடமாட்டத்தில் இருந்துவந்திருக்கின்றன. உண்மையான சங்கு என்பதனைக் கண்டறிவதற்கு ஒரு பெரிய பாத்திரத்தில் கிணற்றுநீரை நிறைத்து அதில் சற்றுக் கூடுதலாகவே உப்பைப்போட்டுத் தேர்வுக்கு உட்படுத்தப்படும் சங்கை (இப்பரீக்ஷையாவும் பூஜைக்கு வைத்துள்ள - பூஜையிலுள்ள சங்கிற்குக் கூடாது) அந்த நீரினுள் அமிழ்த்தி 5 நாட்கள்வரை வைத்திருக்கவேண்டும். சுத்த சங்காயின் நிறம் கருநிறம் இருக்காது. வேறு சங்காயின் கருத்து வெடிப்பு ஏற்படும்.

சங்குகளை நெருப்பிலிட்டுச் சோதனை செய்வது விலக்கப்பட்டதாகும் என்பதால் அம்முறை மேற்கொள்ளத்தக்கதல்ல.

முக்கியமான சில குறிப்புகள்

மிகவும் உயர்ந்ததெனச் சொல்லப்படும் இச்சங்கு உண்மையில் தூய தன்று. அச்சங்கை வெறுங்கையால் தொடுவது கூடாது. ஆனால் அதனுள் இருக்கும் நீர் கங்கைநீரையும்விட பவித்ரமானது, பாபங்களை நீக்கவல்லது, "அதில் வைக்கப்பட்ட பால் - சந்ததியற்ற பெண்களுக்குப் புத்திரப்பேற்றை யளிக்கவல்ல ஔஷதம் ஆகும்" என்று கூறப்பட்டுள்ளது.

